
# அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பு

பாடம் 15

அல்குர்ஆன் அல்லாஹ்வின் (கலாம்) பேச்சாகும். அது முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்கு வஹீ மூலம் அருளப்பட்டது. மக்கள் அனைவருக்கும் நல்வழி காட்டுவதற்காக அல்லாஹ் குர்ஆனை இறக்கி வைத்தான். குர்ஆனின் போதனைகளை நன்கு விளங்கி நமது வாழ்வில் ஏற்று நடக்க வேண்டும்.

குர்ஆனை ஓதுவதற்கும், விளங்குவதற்கும் ஏற்ற முறையில் அல்லாஹ் அதனை இலகுவாக அமைத்துள்ளான். அதனை எந்த அளவு அதிகமாக ஓதுகின்றோமோ அந்த அளவு இன்பமும் சுவையும் ஏற்படும்; நன்மையும் கிடைக்கும்: இறை அருளும் கிடைக்கும். அதனை ஓத ஓதச் சலிப்பும் ஏற்படாது. பிறர் ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதற்கு நன்மை கிடைக்கும்.

குர்ஆனை ஓத ஆரம்பிக்குமுன்னர் வுழூச் செய்து கொள்ள வேண்டும். சுத்தமான ஆடை அணிந்து, சுத்த மான இடத்தில் இருந்தே அதனை ஓத வேண்டும். அல்லாஹ் வின் கலாமை ஓதுகின்றேன் என்ற தூய எண்ணத்துடன் ஓத வேண்டும். அழகாகவும் திருத்தமாகவும் ஓத வேண்டும். குர்ஆனை ஓதுவதனால் அல்லாஹ்வின் அன்பும், நற்கூலியும் கிடைக்கும். திருத்தமாக ஓத முடியாதவர் திக்கித் திக்கி ஓதினாலும் கூட நற்கூலி கிடைக்கும்.



குர்ஆனை ஓதி வருபவருக்காக, மறுமை நாளில் குர்ஆன் சிபார்சு செய்யும். தன்னை ஓதியவரின் பாவங்களை மன்னிக்கும்படி, குர்ஆன் அல்லாஹ்விடம் மன்றாடும். அல்லாஹ் குர்ஆனின் சிபாரிசை ஏற்று அதனை ஓதியவரின் பாவங்களை மன்னித்து அவரைச் சுவர்க்கத்திற்கு அனுப்பி வைப்பான்.

நாம் குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும்போது மலக்குகள் எமக்காக துஆச் செய்கின்றார்கள். எமது வீடுகளில் "ஸகீனா" என்னும் அமைதியையும், "ரஹ்மத்" என்னும் அருளையும் அல்லாஹ் இறக்கி வைக்கின்றான்.

குர்ஆனை மனனஞ் செய்வது மிகச் சிறந்த செயலாகும். மனனம் செய்தவரின் முகத்திலும் உள்ளத்திலும் ஒருவித ஒளி பிரகாசிக்கும். "குர்ஆனின் ஒரு சிறு பகுதியையாவது மனனம் செய்யாதவரின் இதயம் பாழடைந்த ஒரு வீட்டைப் போன்றதாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, மாணவர்களாகிய நாம் குர்ஆனைத் திருத்தமாக ஓதிப் பழகுவதுடன் சிறுசிறு ஸூறாக்களையாவது மனனம் செய்து அல்லாஹ்வின் அருளைப் பெறுவோம்.

**அல்குர்ஆனை ஓதுவோம்; அதன்படி நடப்போம்.**

## பயிற்சி

**பின்வரும் வசனங்கள் சரியாயின் "சரி" என்றும், பிழையாயின் "பிழை" என்றும் கட்டத்தினுள் எழுதுங்கள்.**

(1) அல்குர்ஆன் நபி(ஸல்) அவர்கள் காலம் தொட்டு உலகம் முடியும் வரையுள்ள மக்களுக்காக அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதமாகும். ☐

(2) குர்ஆனின் ஓர் எழுத்தை ஓதினாலும் அதற்கு நன்மை உண்டு. ☐

(3) வுழூவுடன் இருக்கும்போதுதான் குர்ஆனைத் தொட முடியும். ☐

(4) குர்ஆனைத் திருத்தமாக ஓதத் தெரியாதவர் ஓதக்கூடாது. ☐

(5) குர்ஆன் ஓதுபவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும். ☐